# தீவிபத்தில் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்கு ஸ்ரீ ஜோகூர் அடுக்குமாடியில் மாற்றுவீடுகள்

கோலாலம்பூர், பிப். 14-

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ சபா அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் வீட்டை இழந்த 5 குடும்பங்களுக்கு செராஸ் ஸ்ரீ ஜோகூர் அடுக்குமாடிக் குடியிருப்பில் மாற்று வீடுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

நாளை வியாழக்கிழமை முதல் தீவிபத்தால் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களும் மேற்குறிப்பிட்ட வீடுகளில் குடியேறலாம் என அவர் தெரிவித்தார்.

தீயினால் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்கும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் இந்த மாற்று வீடுகளை ஏற்பாடு செய்வதாகவும் அவர் சொன்னார்.

பாதிக்கப்பட்ட அந்த 5 குடும்பங்களும் 6 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை அங்கு குடியிருக்கலாம். அவர்கள் 6 மாதம் முதல் 3 ஆண்டுகளுக்குள் மாற்று வீடுகளைத் தேடிக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என அவர் கூறினார்.

தீயினால் பாதிக்கப்பட்ட வீடுகளின் வெளிப்புறத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் சீர்படுத்திக் கொடுக்கும். அதேவேளையில் வீட்டினுள் ஏற்பட்ட பாதிப்புகளை அதன் உரிமையாளர்களே தங்கள் சொந்தச் செலவில் சீரமைப்புச் செய்துகொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.



நேற்று ஸ்ரீ செராஸ் தேசியப்பள்ளியில் தற்காலிகமாக அடைக்கலம் புகுந்துள்ள மேற்குறிப்பிட்ட 5 குடும்பங்களைச் சந்தித்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அப்போது அமைச்சருடன் மகளிர், குடும்ப, சமூக மேம்பாட்டுத்துறை துணை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் நொராய்னி அமாட், பண்டார் துன் ரசாக் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ டாக்டர் வான் அஸிஸா வான் இஸ்மாயில், செராஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டான் கோக் வாய் ஆகியோரும் உடனிருந்தனர்.

தீயினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் கூட்டரசுப் பிரதேச இலாகா தலா 5,000 ரிங்கிட் உதவித்தொகையாக வழங்கும் அதேவேளையில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் தலா ஓராயிரம் ரிங்கிட்டையும் பண்டார் துன் ரசாக் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ டாக்டர் வான் அஸிஸா வான் இஸ்மாயில் தலா ஓராயிரம் ரிங்கட்டையும் சமூகநல இலாகா தலா 300 ரிங்கிட்டையும் வழங்கும் என அவர் தெரிவித்தார்.

தீயினால் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்கு கடந்த திங்கட்கிழமை முதல் குளிப்பதற்கான துண்டு, சமையல் பானை ஆகியவை வழங்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

அதேவேளையில் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தீயணைப்பு - பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு வீடமைப்பு, ஊராட்சித்துறை அமைச்சும் தீயணைப்பு - மீட்புப்படையும் ஒத்துழைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.